**டிசம்பர் - 28**

**"வழியிலே அவர் நதியில் குடிப்பார்; ஆகையால் அவர் தமது தலையை எடுப்பார்."**

**- சங் 110 : 7.**

புதிய உற்சாகத்தோடு உண்மையுடனும், சந்தோஷமாகவும், ஜீவனின் அனுபவங்களின் அருவியில் குடித்து அதிலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவும், அதன்மூலமாக நம்மை சீக்கிரத்தில் நாம் செய்ய வேண்டிய ஊழியத்திற்காக தயார் செய்து பொருத்தவும், இந்தக் காலத்தில் நமக்குள்ள ஊழியத்தில் மேலாக நம்மைத் தயார் செய்து பொருத்தவும் ஜீவனின் எல்லா சோதிக்கிற சந்தர்ப்பங்களிலும், வாழ்க்கையின் மறுபாடுகளிலும், அவருக்குச் சொந்தமான நம்முடைய சரீரங்களிலும், ஆவியிலும் அவரை மகிமைப்படுத்தி அவருடைய கிருபையினாலே அவருடைய புண்ணியங்களை அறிவிக்க சத்தியமாக்கத் தக்கதாகவும், நம்முடைய தலையும், எஜமானருமான கர்த்தரிடத்தில் நம்மை அதிகதிகமாக ஆசிர்வதிக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறோம். நாம் அந்த அருவியில் பருகும்பொழுது, தண்ணீர் குடிக்கும்போது தேவனுக்கு நன்றியைத் தெரிவிக்கிறது போல தங்கள் தலைகளை மறுபடி மறுபடி உயர்த்துகிற சிறுபறவைகளிலிருந்து போதனையை எடுத்துக்கொள்ளுவோமாக. ஜீவியத்தின் ஒவ்வொரு அனுபவத்திற்காகவும், ஒவ்வொரு சோதனைக்காகவும், அவைகளை எல்லாம் நம்முடைய ஆவிக்குரிய விருத்திக்காக நமதாக்கிக் கொண்டு, நாம் இடைவிடாது தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக. **- Z 02, 14 (R 2935).**

மூலவாக்கியத்தில் சொல்லியிருக்கிற அருவி தேவனுடைய வார்த்தையையும் ஜீவியத்தின் அனுபவங்களையும் குறிக்கிறது. இதிலே காட்டப்படுகிற படம் பிரயாணத்தை மேற்கொள்ளக் கூடிய ஒரு சாலை. அதன் பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கிற தெளிவான நீரையுடைய ஒரு அருவி அதிலிருந்து பிரயாணிகள் குடித்துத் தங்களுடைய தாகத்தைத் தீர்க்க தேவனுடைய வார்த்தையாகிய அருவியைக் கண்டார். அதிலிருந்து குடித்து இளைப்பாறுதலைப் பெற்றார். அவரைப் போல பரம சீயோனுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிற நாமும் உற்சாகப்படுத்தப்பட அவசியம் ஏற்படும்போதெல்லாம் சாந்தப்படுத்துகிறதும், தாகந்தீர்க்கிறதுமான இந்த அருவியில் பானம் பண்ணுவோமாக. அவ்வாறே யேசுவும் புதுப்படிப்பினைகளைப் படித்துக்கொண்டும், புது அனுபவங்களுக்காகத் தன்னை ஆயத்தம் செய்துகொண்டும், ஜீவியத்தின் அனுபவங்களின் அருவியில் பருகினார். வருங்கால அனுபவங்களுக்கு உதவியாயிருக்கத்தக்கதாக ஜீவியத்தின் அனுபவங்களும் நமக்குப் புதுப் பாடங்களைப் போதிக்கும். ஆசிரியர்களில் மிகவும் சம்பூரணமானது அனுபவம். இதிலிருந்து மிகவும் மந்த புத்தியுள்ள மாணவனே கற்றுக்கொள்ளத் தவறிப்போகிறான். நாம் இந்த வகுப்பாரில் இல்லாதவர்களானதால், தேவனுடைய வார்த்தை, ஜீவியத்தின் அனுபவங்கள் இவை இரண்டிலிருந்தும் கர்த்தர் நமக்குப் போதிக்கின்ற பாடங்களைக் கற்றுக்கொள்ளுவோமாக.

**- P 33, 177, 178.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**லூக் 22.27, அப் 8.32, 33, 2கொரி 8.9,10.1, பிலி 2.5-8, ஏசா 50.5,6, மத் 26.51-54, எபி 12.2-14, எஸ்றா 7.10, சங் 78.2-8, 143.8,10, நீதி 23.12.**

**கோபுர வாசிப்பு : Z 02, 12 (R 2935).**

**வினாக்கள்: இந்த வாரத்தில் வசனத்திலிருந்தும் அனுபவத்திலிருந்தும் நான் படித்தது என்ன? எப்படி? பலன்கள் எவை?**